★ ★

Registered as a Newspaper in Ceylon — விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஏடு 7 — இதழ் 141

National Tamil Daily — தேசிய தினசரி

(2-7-65)

விசுவாவசு ஆனி 18ம் திகதி அவ் ஜூலை 2 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## 'நியாயம் வழங்குக'

பம்பலப்பிட்டி, வியாழன்

முந்திய அரசாங்கத்தினால் தோட்டத் தொழிலாளரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட துப்பாக்கிகளுக்கான நஷ்டஈடு இவர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லையென்றும் தற்பாதுகாப்புக்காக இவர்கள் ஒரு துப்பாக்கி பெறவேண்டுமென்றால் அது மிகவும் கடினமானதொரு காரியமாக இருப்பதாகவும் இவ்விதபாரபட்ச முறைகளை நீக்கி நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நியமன அங்கத்தவர் திரு வி. அண்ணாமலை உள்நாட்டமைச்சரைக் கேட்டுள்ளார்.

# ஒப்பந்தம் அமுலாவதில் கருத்துவேற்றுமை?

## டட்லி-செல்வா உடன்படிக்கையில் அவசரம் கூடாதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு முன்பு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு சா. யே. வே: செல்வநாயகத்துக்கும் திரு. டட்லி சேனாநாயக்காவுக்கும் இடையில் தமிழ் மக்களைப் பாதிக்கும் பிரச்னைகளில் ஏற்பட்ட உடன்பாடுகளை அமுலாக்குவதில் மந்திரிசபையில் சிறு கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது.

தமக்கும் திரு. செல்வநாயகத்துக்கும் இடையில் ஏற்பட்ட பொருத்தத்தை தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இதர கட்சித் தலைவர்களான பிலிப் குணவர்த்தன, டாக்டர் தஹநாயகா, திரு சி. பி. டி. சில்வா, திருமதி குமார ராஜரத்தின போன்றோரிடம் விளக்கி அவர்கள் ஒப்புதலை பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா பெற்றிருந்தாராம்.

இந்த உடன்படிக்கையைக் கண்ணியப்படுத்தி உடனடியாக அமுல்நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன, உள்நாட்டுமந்திரி டாக்டர் தஹநாயகா, கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன ஆகியோர் மிகத் தீவிரமாக இருப்பதாகவும் ஆனால் கல்விமந்திரி திரு இரியகொலையும் உணவுவிவசாயமந்திரி திரு. எம். டி. பண்டாவும் உடன்படிக்கையை அமுல் நடத்துவதில் அவசரம் காட்டக் கூடாதென்றும் அது எதிர்க்கட்சினர் வகுப்புத்துவேஷத்தை வளர்க்க உதவி செய்துவிடுமென்றும் பின்னர் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விடும் என்றும் கருதுவதாகத் தெரிகிறது.

பிரதமர் டட்லியைப் பொறுத்தவரை எப்படியும் கொடுத்த வாக்குறுதியின்படி ஒரு வருடத்திற்குள் உடன்படிக்கை முழுவதும் அமுலாக்கப்பட வேண்டுமென்றும் கருதுவதாகவும் மந்திரிசபையில் உள்ள ஏனைய மந்திரிகள் பிரதமரின் கருத்தையே கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

உடன்படிக்கையை அமுலாக்கும் காலத்தில் தான் கருத்து வேற்றுமையே தவிர ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அல்ல என்பது அரசியல் வட்டாரங்களின் கருத்து.

## மந்திரி சபை கூடியது

கொழும்பு, வியாழன்

மந்திரி சபை இன்று சில விஷயங்கள் குறித்து ஆராய்ந்தது.

இன்றைய மந்திரிசபை கூட்டத்துக்கும் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா வரவில்லை. அவர் பூரண சுகம்பெறவில்லை என அறிவிக்கப்படுகிறது.

மொழிப் பிரச்னை மீதான விவாதம் தாமதப்படுவதாகக் கூறப்படுகிறது. ——

## சீன எல்லை அருகே தாக்குதல்

### அமெரிக்க விமானங்கள் மேற்கொண்டன

சைகோன், ஜூலை 1

வடக்கு வியட்நாமில் கம்யூனிஸ்ட் சீனாவின் எல்லைக்கு 80 மைல் தூரத்தில் அமெரிக்க விமானங்கள் இன்று தாக்குதல்கள் நடத்தி, பாசறைகளையும், ஆயுதகிடங்கு, விமான நிலையங்கள் மற்றும் ஆயுத விநியோக தளங்களையும் நாசமாக்கினர். வடக்கு வியட்நாம் தலைநகர் ஹனோய்க்கு 180 மைல் மேற்கே அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதல்களில் 19 கட்டிடங்கள் முற்றாக சேதமடைந்தன 6 கட்டிடங்கள் சேதமுற்றன. மற்றொரு இடத்தில் 18 தொன் எடையுள்ள குண்டுகளை வீசி பரவலாக தாக்குதல்கள் நடத்தினர். இதில் 180 வியட்கொங் துருப்புக்கள் மாண்டனர்.

டானங் விமானநிலையம் மீண்டும் செயல்படத் தொடங்கிவிட்டதாக கடைசியாக கிடைத்த செய்திகள் கூறுகின்றன. —

## இசை ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்ப்பகுதிகளில், இசை ஆசிரியர்கள் இம்மாத இறுதிக்குள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

வேலையற்ற இசைப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக, இசை ஆசிரியர்களை இம்மாதத்தில் தமிழ்ப் பகுதிகளில் நியமிக்க வித்தியா பகுதியினர் முடிவு செய்திருக்கிறார்கள்.

## மக்களின் தேவைக்கு கொழும்புத்திட்டம் உதவுகிறது

### 15-வது ஆண்டு தினத்தில் மந்திரியின் செய்தி

கொழும்பு, வியாழன்

கொழும்புத்திட்டம் இலங்கைக்கு மிகப்பெரும் நன்மை பயளித்திருக்கிறது என நீதிமந்திரி செனட்டர் யு. பி. வன்னிநாயக்கா கொழும்புத் திட்டத்தின் 15-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியொன்றில் கூறியிருக்கிறார்.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய பரஸ்பர உதவித் திட்டமாக அது விளங்குகிறதென்றும் அவர் கூறினார்.

1950ம் ஆண்டு கொழும்பில் 7 நாடுகள் கொழும்புத் திட்டத்தை உருவாக்கின. அதுமுதல் கொழும்புத்திட்ட அங்கத்துவ நாடுகள் படிப்படியாக வளர்ந்து இப்போது 22 நாடுகளைக் கொண்டிருக்கின்றன.

கொழும்புத்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இதுவரை 790 லட்சம் ரூபாய் உதவி கிடைத்திருக்கிறது. 1900 க்கு மேற்பட்ட இலங்கையர் இத்திட்டத்தின் கீழ் வெளி நாடுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

கொழும்புத்திட்டம் ஆரம்பமானதிலிருந்து இதுவரை இந்தியா 40 நிபுணர்களை இலங்கைக்களித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் 284 இலங்கையர்கள் பல்வேறு துறைகளில் இந்தியாவில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

### அறிவித்தல்

இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை (வரையறை) ஸ்தாபனம்

மேற்படி தொழிற்சாலையில் உற்பத்தியாக்கப்படும் துவாய், பெட்சீற் முதலிய துணிகள் யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 246-ம் இலக்க விற்பனவு நிலையத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். 442

# பாக். ஆக்கிரமிப்பு அம்பலமாகிவிட்டது

### கட்ச்-ரண் யுத்தநிறுத்தம் -குறித்து சாஸ்திரி

புதுடில்லி, ஜூலை 1

"கட்ச் - ரண் பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமித்திருக்கிறது என்பது தற்பொழுது கைச்சாத்திடப்பட்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் அம்பலமாகிவிட்டது" என்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இன்று இரவு நாட்டு மக்களுக்கு பிரதமர் விடுத்த வானொலிச் செய்தியில்தான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்ச்-ரண் யுத்த நிறுத்தம் பற்றி பிரதமர் மேலும் குறிப்பிடுகையில்; எல்லைப் பிரச்னைகளை பலாத்காரம் மூலம் தீர்த்துவிட முடியாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்றும் கூறினார்.

'கட்ச்-ரண் பகுதியில் பாகிஸ்தானின் சருப்புகளோ அல்லது பொலிஸாரோ இருக்க முடியாது. இந்திய சிவில் கட்டுப்பாட்டின் கீழ் இப்பகுதி இருந்துவரும்" என்றும் அவர் தெரிவித்தார்.

"கட்ச்-ரண் பகுதியில் ஏற்பட்ட நெருக்கடிகளினால் இக்

(6-ம் பக்கம் பார்க்க)

## பஸ் – சைக்கிள் மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து (ஆனைக்கோட்டை வழியாக) கீரிமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றும் ஆறுகால் மடத்தருகில் எதிரே வந்துகொண்டிருந்த சைக்கிள் ஒன்றும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் வந்தவர் ஸ்தலத்திலேயே மாண்டதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் நேற்றிரவு நிகழ்ந்தது.

## மீன்பிடிக்கச் சென்றவர்கள் 5 நாட்களாகியும் திரும்பவில்லை

குரும்பசிட்டி, வியாழன்

பலாலி கடற்கரையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற லோகேச செல்வராசா என்பவரும் உடப்பு கிராமசபையைச் சேர்ந்த இருவரும், ஐந்து நாட்களாக கரைக்குத் திரும்பவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தேடுவதில் இலங்கை ஆகாய விமானப்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் குடும்பத்தினரும் இவர்கள் கரைசேர்வார்கள் என்று தினமும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மூவரும் கரைதிரும்புவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இதுவரை இவர்களைப்பற்றிய தகவல் எதுவும் குடும்பத்தவர்களுக்குக் கிடைக்கவில்லை.

கிராம மீனவர்கள் வள்ளத்தில் பல மைல்தூரம் சென்று தேடியபின் ஏமாற்றத்துடன் கரைக்குத் திரும்பிவந்துள்ளனர்.

## ஆடம்பரவாழ்க்கையை உதறித்தள்ளுங்கள்

### பெண்களுக்கு மந்திரி புத்திமதி

சாவகச்சேரி, வியாழன்

ஆடம்பரமற்ற வாழ்க்கையை உதறித் தள்ளி நாட்டை முன்னேற்றத் துணை புரியும் கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று தைலஸ்தாபன மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் யோசனை கூறியுள்ளார்.

சாவகச்சேரி மாதர் சங்கத்தினர் செனட்டர் திருச்செல்வத்துக்கு சாவகச்சேரி வாடிவீட்டில் இன்று காலை விருந்தளித்து கௌரவித்தனர். சங்கத் தலைவி திருமதி வள்ளிமுத்து, மந்திரியை வரவேற்றுப் பேசினார்.

இந்த வரவேற்பில் மந்திரி திருச்செல்வம் தொடர்ந்து பேசுகையில், சமுதாயத்தை முன்னேற்றுவதில் பெண்கள் அதிகமான சேவையாற்ற முடியுமென்றும் பல துறைகளிலும் முன்னின்றுழைக்க பெண்கள் முன்வரவேண்டுமென்றும் கூறினார்.

வாழ்க்கைச்செலவு குறித்து மந்திரி பேசுகையில், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதென்றும் சில மாத காலத்துக்குள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் அபிவிருத்தி அடைந்து எல்லோரும் சுமுகமாக, சந்தோஷமாக வாழ முடியும் என்றும் அதற்கான பணியில்தான் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறதென்றும் கூறினார்.

"நாட்டிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சாரவசதி அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்மூலம் பல பகுதிகளிலும் கைத்தொழில் அபிவிருத்தி செய்ய முடியும்" என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

**மணிவாக்கு**

வாழ்க்கையின் எல்லா துன்பங்களையும் தீர்க்கக் கூடியது அன்பு ஒன்று தான்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி 18 உ (2-7-65)


## சர்வகலாசாலை இடநெருக்கடி

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 2145 மாணவர்களை மட்டுமே சேர்த்துக் கொள்ள இடமிருக்கிறதாம். ஆனால் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து உயர்கல்வி கற்பதற்கான தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலோரின் நிலை என்ன?

சமீபத்தில் வெளியான ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சையில் சித்திபெற்ற, பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்விபெறக் கூடிய தகுதியுடைய மாணவர்கள் பத்தாயிரத்துக்கு மேலுள்ளனர். இலங்கைப் பல்கலைக் கழகத்திலோ 2145 மாணவர்களுக்கு மட்டும்தான் இடமிருக்கிறது. பல்கலைக்கழகப் படிப்புப் பெறத் தகுதியிருக்கும் இடமின்மை காரணமாக உயர்கல்வி பெற முடியாமலிருக்கும் மாணவர்களின் எதிர்காலம் என்ன? இதுவரை அவர்கள் கல்விக்காகச் செலவிட்ட பணமும் நேரமும் வீண்தானா? பல்கலைக்கழகத்தில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதற்கு திறமையும் தகுதியுமுள்ள மாணவர்கள் பலியாக வேண்டுமா?

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இப்பொழுதுதான் முதல் தடவையாக இடநெருக்கடி ஏற்படவில்லை. பலகாலமாக இப்பிரச்சினை இருந்து வருகிறது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பலரும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பலவித யோசனைகள் தெரிவித்திருக்கின்றனர். எந்த யோசனையும் இதுவரை செயலாகவில்லை. பல்கலைக்கழக இடநெருக்கடியைக் குறைப்பதற்கு தென்மாகாணத்திலும் வடமாகாணத்திலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் நிறுவலாம் என்று பல்கலைக்கழக உபஅத்யட்சகர் சேர். நிக்கலஸ் அட்டிகலே அரசாங்கத்துக்கு யோசனை கூறியிருந்தார். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படுமென்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் வாக்குறுதி அளித்த முன்னைய அரசாங்கம் உபஅத்யட்சகரின் இந்த யோசனையையும் என்ன காரணத்தினாலோ புறக்கணித்துவிட்டது. தமது யோசனையை சேர் நிக்கலஸ் சமீபத்திலும் அரசாங்கத்துக்கு நினைவூட்டியிருக்கிறார். தகுதியும் திறமையுமுள்ள மாணவர்களுக்கு உயர்கல்வி கிடைக்கவும் கண்டிக்கும் கொழும்புக்கும் செல்வதால் ஏற்படும் கஷ்டங்களும் செலவுகளும் குறையவும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க தேசிய அரசாங்கம் இணங்குமென்றும் இதற்கான முயற்சி விரைவில் மேற்கொள்ளப்படுமென்றும் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சென்ற வருடம் இதே மாதிரி இடநெருக்கடி ஏற்பட்டபோது அதிகப்படியான மாணவர்களை தனிப்பட்ட முறையில் பரீட்சைக்குத் தோற்றும்படி செய்வதாகத் தெரிகிறது. அவ்வித முறையையே இவ்வாண்டும் செய்வது மாணவர்களுக்கு நீதி வழங்குவதாகாது. இந்தியாவில் புதிது புதிதாக சர்வகலாசாலைகள் ஆரம்பிப்பதுடன் டில்லி முதலிய இடங்களில் மாலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இலங்கை அரசாங்கம் இவ்விஷயத்தில் மாணவர்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தாமல் உள்நாட்டில் கூடுமான முயற்சி எடுப்பதுடன் மேற்படிப்புக்கு வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கும் தாராளமாக வசதிகள் அளிக்கக் கடமைப்பட்டுள்ளது.

## செவ்விந்திய பாரம்பரை

டிரெஸ்டன், ஜூலை 1

சிகப்பு இந்திய வம்சம் தோன்றிய வரலாறு பற்றிய பிரச்சினைகளைக் கவனிக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் கலாச்சாரக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள் டிரெஸ்டன் நகரில் ஒரு கூட்டம் நடத்தினர். இக்கூட்டத்துக்கு "இந்தியர் சபை" என்று கூறப்படுகிறது. ஆண்டுதோறும் "இந்தியர் சபை" நடைபெறும் போது, அதில் பங்குபற்றுவோர் செவ் இந்தியர்களைப் போல உடை அணிந்து புராதன இந்திய விளையாட்டுக்களிலும் நடனங்களிலும் ஈடுபடுவர். இக் கலாச்சாரக் குழு சிகப்பு இந்தியர் பற்றிய புத்தகங்கள், அவர்களின் மொழி நடனம், பாட்டு, வரலாறு பற்றிய தஸ்தாவேஜுகள், முதலியவை சேகரித்து வைத்துள்ளது.

## உலகப் புகழ்பெற்ற சிகிச்சை நிலையம்

பெர்லின், ஜூலை 1

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள பாதங்களின் ஊனத்தைச் சுகப்படுத்தும் சிகிச்சை நிலையத்தில் சைப்ரஸ், அல்ஜீரியா, கியூபா மற்றும் தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 130 நோயாளர்கள் 1964-ல் சிகிச்சை பெற்றுள்ளனர். இச்சிகிச்சை நிலையத்தில் 1950-க்குப் பின் 8,600 செயற்கை அவயங்கள் செய்யப்பட்டு 15 நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

இச்சிகிச்சை நிலையம் சர்வதேசப் புகழ் பெற்றதாகும். இங்கு கடமையாற்றும் டாக்டர்களுக்கும், செயற்கை அவயங்களைத் தயாரிக்கும் தொழில் நுட்ப நிபுணர்களும் தங்களின் ஆராய்ச்சிகள் பற்றி 90 உலக விஞ்ஞான சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் எழுதியுள்ளனர். சர்வதேச மாநாடுகளில் இதுபற்றி விரிவுரைகளும் நிகழ்த்தியுள்ளனர்.

# தீஞ்சுவைத் திருவாசகம் தந்த மணிவாசகர்

— செல்வி க. பூரணம் —

தமிழ் மக்கள் ஒரு புகழ் பெற்ற இனத்தின் வழிதந்தவர்கள் என்றும் மற்ற நாட்டினர்களால் போற்றப்படுவதற்கு தித்திக்கும் தீந்தமிழாகிய திருவாசகமும் உலகப் பொதுமறையாகிய திருக்குறளும் முக்கிய காரணங்களாகும். தமிழன்னையாகிய ஒளவையார் தண்டமிழ்ச் சிறந்தநூல்கள் திருவாசகமும் திருக்குறளும் என்று கூறிப் போற்றியுள்ளார். மேல்நாட்டிலிருந்து தமது மதத்தை பரப்ப வந்த கிறிஸ்தவ பாதிரியாராகிய போப் தமிழ்பண்டிதர் திருவாசகத்தையும் படித்தார். ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமலிருக்கும் திருவாசகம் ஆங்கிலப் பாதிரியாரை தமிழ் மாணவனாக்கியது. எனவே இத் திருவாசகத்தை ஒரு சமய நூலாக மட்டுமன்றி பத்தி அளவு காட்டும் சிறந்த இலக்கியமாகவும் நாம் கொள்ளுதல் வேண்டும். இத்தகைய கனிவுடன் கடவுட் தன்மையை போதிக்கும் இலக்கியத்தைத் தந்த பெருந்தகை மணிவாசகப் பெருமான் ஆவர்.

உண்மையான பேரின்பத்தை மறந்து உலகத் துன்ப வாழ்க்கையை இன்பவாழ்க்கையென எண்ணிவாழும் மக்கள் போல மணிவாசகரும் வாழ்ந்து வந்தார். ஆனால் இறைவன் உலகத்துன் சுழியில் அவரைச் சிக்கவிடாது காப்பாற்ற முன்வந்தார். அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக பணிபுரிந்த திருவாதவூரராம் மணிவாசகர் பரிகள் வாங்கச் சென்றார். செல்லும் வழியில் இறைவன் திருப்பெருந்துறையிலே திருக்குருந்தமர நிழலிலே குருவாக வீற்றிருந்து திருவாதவூரரை ஆட்கொண்டார். வலிய வந்தாட்கொண்ட இறைவனை மணிவாசகர் பல இடங்களிலும் மனம் கரைந்து அவர் பெருந்தன்மையை எண்ணி எண்ணி உருகினார்.

'பாலினை நூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே'

என்றார்.

உலக மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக பண்பாடு கலாச்சாரத்தில் முன்னணியில் நின்ற தமிழ்ச்சமூகம் பல வேறு குழுக்களாகப் பிரிந்து தாங்கள் செய்யும் தொழில்களைச் சிறப்பாகச் செய்துவந்தது தொழிலை ஏதுவாகக்கொண்டு அமைந்த பெயர்கள் காலப் போக்கில் ஒவ்வொரு சாதியாக அமைந்து இச்சாதிப்பாகுபாடுகள் நானாவட்டத்தில் தமிழ் மக்களின் ஒருபகுதியினரைக் குழி தோண்டிப் புதைக்கும் நிலைக்கு கொண்டுவந்தது. இதனைப் பல சான்றோர்கள் எடுத்துக்காட்டி சீர் திருத்தம் செய்ய முற்பட்டனர். மணிவாசகப் பெருமானும் சாதிகுலப் பிரிவால் சமூதாயத்திற்கு ஏற்படும் தீமையைச் சுட்டிக்காட்டி அகற்றப் பாடியுள்ளார்.

'சாதிகுலப் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்
தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலா
வுதில்லை கண்டேனே'

சாதி பேதங்களை அகற்றிச் சமுதாயத்தைச் சீர்திருத்தும் சிறந்த சீர்திருத்தவாதியாக அன்றே மணிவாசகப்பெருமான் விளங்கினார்.

மணிவாசகப் பெருமானின் தெய்வத் திருமறையாம் திருவாசகத்தின் பெருமையை உணர்ந்த போப்பையர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஜெர்மனியப் பேரறிஞர் பெடரிக்மைலர் உலகத்திலுள்ள சிறந்த ஞானிகளில் ஒருவராக மணிவாசகரைப் பிரார்த்தனை என்னும் நூலில்போற்றியுள்ளார். ஒரு பழம் பாடல் 'முனிமொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம் என்றுணர்' என்கிறது. 'திருவாசகத்திற்குருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.' மனம் கரைந்து மலம் கெடுக்கும் வாசகம் திருவாசகத்தின் சிறப்பை இப்பழமொழிகள் உணர்த்துகின்றன. வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்

'வான்கலந்த மாணிக்கவாசக
நின் வாசகத்தை நான்
கலந்து பாடுங்கால் கற்கருப்பஞ் சாற்றினிலே தேன்கலந்து
பால் கலந்து செழுங்கனித் தீஞ்
சுவை கலந்தென் ஊன்கலந்து
உயிர் கலந்து உவட்
டாமலினிப்பதுவே'

என்று திருவாய் மலர்ந்திருக்கிறார். எல்லா உலகமும் அழிந்த கடையூழிக் காலத்தில் தன்தனிமை கழிக்கவோ தாண்டவப் பெருமான் தன் கையினால் எழுதிய திருவாசகத்தை வைத்திருக்கிறார் என மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை வியக்கிறார்.

இத்தகை சிறப்புமிகு திருவாசகத்தைத் தந்த செம்மல் மாணிக்கவாசகரின் நினைவு நாள் ஆனியாகும், இந்நினைவு நாளில் மட்டுமன்றி என்றும் திருவாசகத்தைப் படித்துச் சுவைத்து அதன் மூலம் மணிவாசகப்பெருமானை நினைவுகூர்வோம்;

## ஐயாறன் எழுதுவது

திருக்கேதீச்சரம் திருப்பணி வேலைக்காக தமிழ் நாட்டிலிருந்து 12 சிற்பிகளுடனே ஸ்ரீ செல்லக்கண்ணு ஸ்தபதியார் வந்துள்ளாரல்லவா? அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 400 வீதம் விசாவரி கட்டத்தான் வேண்டுமா என்று விசாரித்தேன்.

அவர்கள் இப்போது 80 நாள் விஸா எடுத்து வந்துள்ளனராம், விஸா வரி அநேகமாக கட்டத்தான் வேண்டியிருக்குமென்றும், எப்படியும் இம்முறை எவ்வளவு வரியானாலும், திருப்பணி வேலையைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அறிந்தேன்.

சம்புத்த ஜயந்திக்காக லட்சக்கணக்கான ரூபாய் பொதுப் பணத்திலிருந்து அரசாங்கம் செலவிட்டது. திருக்கேதீச்சரம் கோவில் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டதால், இந்தக் கோவில் திருப்பணிக்கு அரசாங்கம் தாராளமாக உதவவேண்டியதே முறை. இந்தியாவில் சோமநாதர் ஆலயத் திருப்பணிக்கும், பல பௌத்த ஸ்தல திருப்பணிக்கும் அங்குள்ள அரசாங்கம் தாராளமாகப் பணம் உதவியுள்ளது.

அதேபோல திருக்கேதீச்சரத் திருப்பணிக்கும் இலங்கை அரசாங்கம் தாராளமாக உதவவேண்டியது அதன் கடமை. இந்த எம். பி. க்கள் இதை பார்லிமெண்டில் எடுத்துக் கூறி, இந்த உதவியைப் பெற்றுத் தரவேண்டும்.

பணச் சங்கடம் முதலியசாக்குப் போக்குகள் கூறி, இதற்கு அரசாங்கம் கைவிரிப்பதாயின், திருப்பணிவேலைக்காக வந்துள்ளவர்களுக்கு விஸா வரி விதிக்காமலாவது இருக்க வேண்டும்.

அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் பல இந்துக் கோவில்களும் நாசமாக்கப்பட்டுள்ளன. இதை மனதிலிருத்தி அரசாங்கம் இவ் விஷயமாக விசேஷ சலுகையும், தாராள மனமும் காட்டுமென்றே நம்புவோம்.

* * *

சிதம்பரம், மாதிரி மங்கலம், பழனி, காரைக்குடி, கோயம்புத்தூர், தேவக்கோட்டை முதலிய பல ஊர்களைச் சேர்ந்தவர்களாம் இங்கு வந்துள்ள சிற்பிகள். அவர்களில் பலர் வாலிபர்கள், இந்திய அரசாங்கம் மகாபலிபுரம் எனும் மாமல்லபுரத்தில் நடத்தும் சிற்பக் கல்லூரியில் பயின்று சிலர் டிப்ளமா பத்திரம் பெற்றவர்கள்.

விக்கிரகங்களை சாஸ்திர ரீதியாக அமைப்பதில் ஒருவர் நிபுணராம், இந்தியாவிலேயே ராமேச்வரம் முதலிய பல ஊர்களிலும் திருப்பணி வேலைகள் அதிகம் நடப்பதாயும், அங்கு வேலைகள் அதிகம் இருப்பதாயும், இச் சிற்பிகளைத் தெரிவுசெய்து, பாஸ்போர்ட், விஸா, ஊசி குத்தல் முதலிய சடங்குகள் செய்ய சுமார் 6 மாதகாலம் பிடித்ததாயும் ஸ்தபதியார் தெரிவித்தார். திருச்சியிலும் பலாலி விமான நிலையத்திலும் தங்களுக்கு எவ்வித சங்கடமுமில்லை என்றும், திருப்பணி வேலையை பூர்த்திசெய்துவிட்டே இந்தியா திரும்புவதென்று இவர்கள் வந்துள்ளதாகவும் தெரிகிறது.

* * *

முன்காலத்தில் கட்டிய மதுரை முதலிய கோபுரங்களும், கோவில்களும் அப்படியே கெட்டியாக இருக்கையில், இக்காலத்து இஞ்சினியர்களால் கட்டப்படும் கட்டிடங்களில் சில, கட்டிய சில மாதங்களுக்குள்ளாகவே வெடிப்பு கண்டுவிடுவதைப் பற்றி ஸ்தபதியாரைக் கேட்டேன்.

அவர் சிரித்துவிட்டு, நமது சாஸ்திரப்படி கட்டும் கோவில்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கள் எவ்வளவு காலமாயினும் அசையாதென்றும், மண், நீர், அல்லது கல் காணும் வரை வெட்டி அஸ்திவாரமிட வேண்டுமென்றே சாஸ்திரம் கூறுவதாயும் சம்ஸ்கிருத சுலோகங்களை மேற்கோள்களாகக் கூறினார்.

கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சர நாதன் கோவில் திருப்பணிக்கு யாழ்ப்பாணத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் கைவெழுத்தாகி இருப்பதாயும் ஆனால் 53 ஆயிரம்தான் வசூலாகி இருப்பதாயும், இத்திருப்பணியை முடிக்க அதிகப் பணம் தேவைப்படுமென்றும் தெரிகிறது. வேலை ஆரம்பமானதும், பணம் குவியுமென்று நம்பப்படுகிறது.

* * *

திரு. ஔவை துரை நடராஜன் இன்னும் ஒரு வாரத்திலே இலங்கை திரும்பி, சரவெட்டி கோவில் திருவிழாவில் பத்துநாட்கள் பெரிய புராணம் பற்றி பிரசங்கம் செய்வாரென்று தெரிகிறது. அவரது ஒரு பிரசங்கத்தை வட்டுக்கோட்டையில் கேட்டேன். கேட்டவர்களெல்லாம் வயிறு புண்ணாகும்படி அவ்வளவு நகைச் சுவை. தடைகளுக்குத் தப்பி அவர் வரமுடிந்தால், அவர் பிரசங்கத்தைக் கேட்கத் தவறாதீர்கள்.

* * *

மெய்த்தவன் காண் மெய்த்தவத்தில் நிற்பார்க் கெல்லாம்
விருப்பிலா இருப்புலினையர்க்
கென்றும். பொய்த்தவன்
காண் புத்தன் மறவா தாடி
பெறிசல்லி புது மலர்களாக்
கினான் காண், உய்த்தவன்
காண் உயர்கதிக்கே உலகினரை
உலவாத்தும் ஒளிகதனித்
திட்டுய்யச்செய்யும், வித்தகன்
காண் வித்தகர்தாம் விரும்பி
யேத்தும் விண்ணிழி தண்
வீழிமிழலையானே.

— அப்பர் சுவாமிகள்.

# ஒரு வாரத்திற்குள் இரு பகுதி துருப்புகளும் வாபஸ் பெறப்படும்

## கட்ச் ஒப்பந்தத்துக்கு பல தலைவர்கள் வரவேற்பு

### ஜனவரி 1-ந் திகதி நிலையை ஏற்படுத்த வழி செய்யப்படுகிறது

புதுடில்லி, ஜூலை 1

**குஜராத் - மேற்கு பாகிஸ்தான் எல்லையில் கடந்த ஜனவரி முதலாம் திகதி இருந்த நிலையை மீண்டும் ஏற்படுத்த கட்ச் ஒப்பந்தம் வழிசெய்கிறது.**

இதன்படி சாடபேட்டை இந்திய பொலீஸ் வசப்படுத்திக் கொள்ளலாம். கஞ்சர்கோட் இந்திய கட்டுப்பாட்டிற்குள் வருகிறது.

கட்ச் பகுதியில் எல்லைப் பிரச்னை எதுவும் கிடையாது என்றும் ஏற்கனவே பட்டத்தில் காட்டப்பட்டிருக்கும் எல்லையை நிலத்தில் வரைவது தான் வேலையாக இருக்கும் என்றும் புதுடில்லி அதிகாரியொருவர் கூறினார்.

இருபகுதி துருப்புக்களும் இன்னும் 7 தினங்களுக்குள் எல்லையிலிருந்து விலகிக் கொள்ளும் ஒப்பந்தப்படி கட்ச்-ரன்னின் நிர்வாகக் கட்டுப்பாடு பாரதத்திடம் தொடர்ந்து இருந்துவரும் என்றும் ஒன்றரை மைல் இந்தியப் பிரதேசத்தில் பாகிஸ்தான் பொலிசார் ரோந்துசுற்றி வருவார்கள் என்றும் மேலும் அவர் கூறினார்.

"இது வெயர்காலமான சலுகை. இன்னும் 4 மாதங்களில் அங்கு கடல் உட்புகுந்து விடுமாதலால் ரோந்து நடவடிக்கை சாத்தியமில்லை" என்றும் அவர் கூறினார்.

**தலைவர்கள் வரவேற்பு**

கட்ச் ஒப்பந்தம் இந்திய-பாகிஸ்தான் உறவு அபிவிருத்திக்கு முதலாவது கட்டம் என பிரிட்டிஷ் பிரதமமந்திரி ஹரோல்ட் வில்சன் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

இது கௌரவமான ஒரு ஒப்பந்தம் எனப் பாதுகாப்புமந்திரி திரு. சாவன் கூறினார்.

கட்ச் ஒப்பந்தம் விவேகத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு என பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் கூறியிருக்கிறார். இதேபோல் இந்தியாவுடனுள்ள இதர பிரச்னைகளையும் ஏன் தீர்த்துக் கொள்ளக்கூடாது என வினவிய அவர் கட்ச் ஒப்பந்தத்தை உருவாக்கப் பாடுபட்ட பிரிட்டிஷ் பிரதமர் வில்சனுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

**ஜனசங்க ஆர்ப்பாட்டம்**

கட்ச் ஒப்பந்தத்தை எதிர்த்து நேற்று ஜனசங்க அங்கத்தினர்கள் பலர் வெளிநாட்டு அமைச்சிலுள்ள பிரதமமந்திரியின் காரியாலயத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானிடம் சரணாகதி அடையச் செய்கிறது என அவர்கள் கோஷமிட்டனர். 2 பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் உட்பட 50 ஜனசங்க உறுப்பினர்கள் பின் கைதுசெய்யப்பட்டனர்.

கட்ச் ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே ஏற்படவிருந்த ஒரு முழுச் சண்டையைத் தவிர்த்திருக்கிறது எனப் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

**யுதாண்டிடம் கொடுபட்டது**

கட்ச் ஒப்பந்த நகல் ஒன்றை ஐ. நா.வினுள்ள இந்தியப் பிரதிநிதி சக்ரவர்த்தி நேற்று யுதாண்டிடம் சமர்ப்பித்தார். விசாரணை மன்றம் அமைப்பது குறித்தும் அவர் யுதாண்டுடன் ஆலோசித்தார்.

# தாய்வானுக்கு அமெரிக்க பொருளாதார உதவி நிறுத்தம்

### குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு விட்டதாம்

வாஷிங்டன், ஜூலை 1 டேவிட் பெல் கூறினார்.

போர்மோஸாவுக்கு கடந்த 16 வருடங்களாக அளிக்கப்பட்டுவந்த அமெரிக்க உதவி நேற்றுடன் நிறுத்தப்பட்டதாயும் போர்மோஸா மிகச்சிறந்த பொருளாதார முன்னேற்றத்தை அடைந்திருப்பதாயும் அமெரிக்க வெளிநாட்டு உதவித் தலைவர் திரு. பெல் கூறினார்.

இதர ஆசிய நாடுகளும் முன்னேற்றமடைந்துவருகின்றன எனினும் தாய்வானில்கைத்தொழில் நாடான அமெரிக்காவின் உதவி மூலம் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இதர நாடுகளும் பின்பற்றவேண்டுமென்றார்.

கடந்த 16 வருடங்களில் 142½ கோடி டொலர் அமெரிக்கா பொருளாதார உதவி வழங்கியிருக்கிறது. மக்களின் வருமானமும் இதன் மூலம் இரட்டிப்பாகியிருக்கிறது. நாட்டின் மொத்த உற்பத்தி ஆண்டுதோறும் 7 சதவிகிதம் கூடிவருகிறது என்றும் அவர் கூறினார்.

இவைதவிர ரஸ்தாக்கள், துறைமுகங்கள், மின்சாரநிலையங்கள், பல்வேறு தொகையான ஸ்தாபனங்கள் ஆகியவற்றையும் அமெரிக்கா நிறுவியிருக்கிறதென அவர் குறிப்பிட்டார்.

# டச்சு இளவரசியின் விவாகத்துக்கு மக்கள் ஆதரவு

### வீதிகளில் ஆரவார வரவேற்பு

ஹேக், ஜூலை 1

ஹாலந்து பட்டத்து இளவரசி பீட்ரிக்ஸும் அவரை மணக்கவிருக்கும் ஜெர்மானியர் ஹெர்கிளாஸ் வொன் ஆம்ஸ்பர்க்கும் திறந்த காரில் இங்கு பவனிவந்தபோது மக்கள் மகிழ்ச்சிப்பெருக்குடன் ஆரவாரம்செய்தார்கள்.

ராணி ஜூலியானா இருவருக்குமிடையே திருமண ஒப்பந்தத்தை அறிவித்தபின், பொதுஜனக்கருத்தை அறியும் முதல் வாய்ப்பாக இது இருந்தது. காரியாலய ஊழியர்கள் வேலைகளிலிருந்து வீதிவழியாக வீடு திரும்பும் சமயத்தில் கார் ஊர்வலம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. காலநிலை அற்புதமாய் இருந்தது.

ஹேக் நகரம் அதிக ராஜரீக சின்னங்களைக் கொண்ட நகரங்களில் ஒன்று. அதே சமயம் நேற்றுத்தான் இளவரசியின் தந்தை பெர்னார்டின் 54-வது பிறந்ததினமாகும்.

இளவரசியும் அவரது காதலரும், ராஜ தம்பதிகளும் டெலிவிஷனில் நேற்று தோன்றியதை மக்கள் வெகுவாக ஆதரித்ததாகத் தெரிகிறது.

காதலர் ஆம்ஸ்பர்க் ஒரு ராஜதந்திரி. இந்த இளைஞர் ஹிட்லரின் ராணுவத்திலிருந்தவர்.

## சூ, சுகார்னோ, நாஸர், அயூப்

கெய்ரோ, ஜூலை 1

நவம்பர் 5-ம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிய ஆபிரிக்க உச்சி மகாநாடு வெற்றிகரமாக நடைபெற வழிசெய்யப்படும் என சீனப்பிரதமர் சூ என்லாய், ஐக்கிய அரபியக் குடியரசுத் தலைவர் நாஸர், இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ, பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மகாநாட்டின் வெற்றிக்கு சீனா உழைக்கும் என பிரதமர் சூ என்லாய் கூறினார்.

## விமானப் பாதை

டமாஸ்கஸ், ஜூன் 30

பெர்லினுக்கும், சிரியாவின் தலைநகருக்குமிடையே ஒரு விமானப் பாதை அமைப்பதற்காக ஜெர்மன் ஜனநாயகக்குடியரசும், சிரியன் அரபுக் குடியரசும் ஒரு விமான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

## 1000 கிலோவாட் ரேடியோ சாதனம்

### டில்லியில் ரஷ்யா அமைக்கிறது

புதுடில்லி, ஜூலை 1

டில்லி அகில இந்திய ரேடியோவில் 1000 கிலோவாட் சக்தியுள்ள டிரான்ஸிஸ்டர் ஒன்றை அமைக்கும் விஷயமாக ரஷ்ய நிபுணர்கள் இந்தியாவுக்கு வரவிருக்கிறார்கள். நிலையத்தின் அமைப்பு ஒன்றை அவர்கள் வரைவார்கள்.

ஏற்கனவே இத்தகைய நிலையம் ஒன்றை அமைத்துத்தர அமெரிக்கா முன்வந்தது. ஆனால் அதன் நிபந்தனைகள் ஏற்கத்தக்கவையாய் இல்லாமலிருந்ததால் நிராகரிக்கப்பட்டது. இதன்பின் குறித்த நிலையத்தை அமைத்துத்தர ரஷ்யா முன்வந்தது.

# டானுங்கில் கொரில்லா தாக்குதல்: 10 அமெரிக்க விமானங்கள் சேதம்

### டாங்ஹோ கூட்டுத்தாக்குதலில் அமெரிக்காவுக்கு தோல்வி

சைகோன், ஜூலை 1

**தென்வியட்னாமில் அமெரிக்காவின் கேந்திர விமானத்தளமான டானுங்கை நேற்று கொரில்லாக்கள் மோட்டார் பீரங்கிகளால் தாக்கியதில் 3 அமெரிக்க விமானங்கள் அழிந்தன என்றும், மற்றும் 7 விமானங்கள் சேதமடைந்தன என்றும் அறிவிக்கப்பட்டது.**


இந்த விமானநிலையம் தென்வியட்னாம் துருப்புக்களினாலும் 9000 அமெரிக்க மரைன் துருப்புக்களினாலும் பாதுகாக்கப்பட்டுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கொரில்லாக்கள் மோட்டார் பீரங்கிகளினால் தாக்கிவிட்டு இருளில் மறைந்தோடிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்கர்கள் அவ்விடத்தை நோக்கி பீரங்கிப் பிரயோகம் நடத்தினார்கள்.

அதேசமயம் நேற்று அமெரிக்க-ஆஸ்திரேலிய-தென் வியட்னாம் துருப்புக்கள் டியன் ஹோவில் நடத்திய கூட்டுத் தாக்குதல் தோல்வியுற்றதாயும், கொரில்லாக்களை அங்கிருந்து அகற்றமுடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க, தென்வியட்னாம் விமானங்கள் நேற்று வடவியட்னாம் மீது தொடர்ந்து குண்டுகளையும், ராக்கெட்டுகளையும் வீசித்தாக்கின.

இதற்கிடையில் வியட்னாம் சமாதானம் தொடர்பாக பொது நாடுகளின் காமன்வெல்த் தூதுக்குழு சம்பந்தமாக பிரிட்டன் அனுப்பிய குறிப்புக்குப் பதிலளிக்க முடியாதென வடவியட்னாம் அறிவித்திருக்கிறது.




இறங்கியபின் மெக்டிவிட், வைட் ஆகிய இரு வான்வெளி வீரர்களும் ரப்பர் படகொன்றில் இருக்கிறார்கள். அவர்கள் பிரயாணம்செய்த கப்பல் மற்றொரு படகில் இருக்கிறது. வலதுபுறம் தெரியும் கூட்டுக் கோடு இரு வீரர்களையும் ஹெலிகோப்டரில் ஏற்றுவதற்கான கம்பியாகும்

## சாமான் ரயில் தடம் புரண்டது

சென்னை, ஜூலை 1

தாம்பரத்திற்கும் விழுப்புரத்திற்குமிடையில் 43 வாகனங்கள் கொண்ட ஒரு சாமான் ரயில் தடம் புரண்டதால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இராமேஸ்வரம் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் தவிர இதர எல்லா ரயில்களும் ரத்துச் செய்யப்பட்டன.




ஜூன் 7-ம் திகதி அட்லாண்டிக் கடலில் ஜெமினி 4 வான்வெளிக்கப்பலை மெதுவாக இறக்க உதவிய பாரசூட் இயக்கங்களை படத்தில் காணலாம்.

## சுகாதார விழா

நெடுந்தீவு, வியா

நெடுந்தீவில் சுகாதாரவிழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சனிக்கிழமை நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் எல்லாப் பாடசாலைகளும் பங்குபற்றித் தங்கள் திறமையைக் காட்டின. ஞாயிற்றுக்கிழமை கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நடனம், நாடகம், பாடல், பேச்சுப் போட்டிகள் முதலியனவற்றில் திறமையானவற்றிற்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பேச்சும் நடனமும், பாடலும் நாடகமும் சுகாதாரப் போதனைகளை வலியுறுத்துவதாயிருந்தது. தேகாரோக்கியமான குழந்தைத் தேர்வும் நடைபெற்றது.

நெடுந்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் திரிலோகநாதன் தலைமைப் பேருரை நிகழ்த்தினார்கள். காரியாதிகாரி திரு எம். அந்தோனிமுத்து பரிசில்கள் வழங்கப்பட்டன. சுகாதாரப் பரிசோதகர் திரு பொ. ஜெகநாதன் நன்றியுரை நிகழ்த்தினர்.

## கூ. மொ. வி: விசாரணை

பம்பலப்பிட்டி, வியா

கூட்டுறவு மொத்த ஸ்தாபனம்பற்றிய குறைபாடுகளை எழுத்து மூலம் தெரிவிப்பதற்கான காலவரை இன்றுடன் முடிவடைந்தது. 150-க்கும் மேலான முறைப்பாடுகள் எழுத்து மூலம் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

நாளை மறுதினம் விசாரணைச் சமிஷனின் பகிரங்க விசாரணை மீண்டும் ஆரம்பமாகும்போது கூ. மொ. வி முன்னாள் தலைவர் திரு. ரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா விசாரிக்கப்படுவார்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Howard Keel
in
ARMOURED
COMMAND
(War Film)

## நெற்சாகுபடி வருடம்

பம்பலப்பிட்டி, புதன்

அடுத்த வருடத்தை சர்வதேச நெற்சாகுபடி வருடமாகக் கொண்டாட உலக விவசாய ஸ்தாபனம் ஒழுங்குகள் செய்து வருகிறது. இந்த வருடத்தில் நெல் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு உலக ஸ்தாபனம் பலவித உதவிகளை அளிக்கும்.

இலங்கையின் நெல் உற்பத்தி கடந்த 15 வருடங்களில் 125 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது எனினும் பெருந்தொகையான அரிசி வெளிநாடுகளிலிருந்து உற்பத்தி செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

பொன் கந்தையா அரசினர் பாடசாலை இல்லங்களின் விளையாட்டுப் போட்டி ஜூலை மாதம் 3-ந் திகதி சனிக்கிழமை நடைபெறும். கூடுதலான புள்ளிகளைப்பெறும் இல்லத்திற்கு பொன் கந்தையா ஞாபக வெள்ளிக்கிண்ணம் அளிக்கப்படும்.

## உயிர்காக்க உயிர்விட்டார்

சென்னை, ஜூலை 1

8-வயது அமெரிக்கப் பையன் ஒருவனை நீர்ச் சுழலிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் உயிர்விட்ட வெங்கட்ராமன் என்ற யுவனுக்கு 2 வீரவிருதுக்கள் இக்குள்ள கான்ஸல் வழங்கினர். அவரது தாயாருக்கு மாதம் 120 டாலர் வீதம் 3 வருடங்களுக்கு உதவிப்பணமும் வழங்கப்படவிருக்கிறது.



## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம்பெற்ற திரு. ல. திலகநாயகம் போலின் இசை அரங்கேற்றம் இம்மாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறுகிறது. கலையரசு கே. சொர்ணலிங்கம் இந்நிகழ்ச்சிக்கு தலைமைவகிக்கிறார்.

## பச்சை இல்லம் வெற்றி

குரும்பசிட்டி, வெள்ளி

சுன்னாகம் லெனின் விளையாட்டுக் சமூகத்தினரின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றபோது பச்சை இல்லம் 184 புள்ளிகளைப்பெற்று சாம்பியன் இல்லமாகத் தெரிவு செய்யப்பட்டது. சுன்னாகம் விளையாட்டு மைதானத்தில் திரு. எஸ். கணபதி தலைமையில் நடந்தேறிய இவ்விளையாட்டுப் போட்டியில் நீல இல்லம், சிவப்பு இல்லம் ஆகியன முறையே 115, 98 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் மூன்றாம் இடங்களைக் கைப்பற்றின. சுவாரஸ்யமான முறையில் நிகழ்ந்த விநோதஉடைப் போட்டி ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. நீல இல்லத்தைச் சேர்ந்த திரு ஜெகநாதன் விநோத உடைப் போட்டியில் முதலிடம் பெற்றுக்கொண்டார்.

## இலங்கை திரும்பினர்

கோண்டாவில், வியா

அமெரிக்காவிலிருக்கும் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் கடந்த இரு வருட காலமாக உயர்தர கல்விகற்கச்சென்றிருந்த திரு வி. கே. கணேசலிங்கம் இலங்கை வந்து சேர்ந்தார். இவர் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் உபகாரச்சம்பளம் பெற்று, மிருக சாஸ்திரத்தில் தனித்துவப் பட்டம் பெற்று இங்கு வந்துள்ளார். இவர் அமெரிக்காவில் சென்ற இரண்டு மாத காலாகத் தம் கலவிசம்பந்தமான சுற்றுலாவில் நியூயோர்க், வஷிங்டன், சிக்காகோ, சான்பிரான்சிஸ்கோ ஆகிய பல்வேறு இடங்களுக்கும் சென்றிருந்தார்.

மிக விரைவில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மிருகசாஸ்திரத்தில் விரிவுரையாளராக திரு கணேசலிங்கம் பதவி ஏற்க இருப்பதாக அறியப்படுகிறது.

மரவெட்டியைச் சேர்ந்த இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி பழைய மாணவர்.

## தந்திமூலம் இடமாற்றம்

சுழிபுரம், வியாழன்

வலிகாமம் மேற்கு பகுதி கிருஷிக போதனாசிரியராக கடந்த நான்கு ஆண்டுகள் கடமையாற்றிய எம். நடராசா பதவிஉயர்வுடன் திருக்கோணமலை கிருஷிக அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இவ்விடமாற்றம் ஜூன் 30-ம் திகதி தந்திமூலம் அறிவிக்கப்பட்டதுடன் ஜூலை மாதம் 1-ம் திகதி திருகோணமலையில் கடமையாற்றும்படி கேட்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் தமிழ் விழா இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மண்டபத்திலும் திறந்தவெளியரங்கிலும் இன்று தமிழ்விழா ஆரம்பமாகிறது. மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா 4-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

முதல்நாள்விழாவை பாராளுமன்ற அங்கத்தவர் திரு செ. இராசதுரை மங்கல விளக்கேற்றித் திறந்துவைப்பார். திரு க. கந்தையா தலைமையில் நடைபெறும் முதல்நாள் விழாவில் செனட்டர் மு. மாணிக்கம், திருவாளர்கள் க. வே. வயிரமுத்து, ஆ. சபாபதி, சி. கணபதிப்பிள்ளை, க. சந்திரசேகரம்பிள்ளை ஆகியோர் பல்வேறு விஷயங்கள் பற்றி உரைநிகழ்த்துவார்கள்.

திரு எஸ் திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறும் இரண்டாம்நாள் விழாவின் காலை நிகழ்ச்சியில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, புலவர்மணி ஏ பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவர். இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். மாலை நிகழ்ச்சிகளுக்கு பண்டிதர் திரு. வீ சீ கந்தையா தலைமைவகிப்பார்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் தலைமையில் நடைபெறும் மூன்றாம்நாள் விழாவின் காலை நிகழ்ச்சியில் பண்டிதர் செ பூபாலபிள்ளை, கவிஞர் காசி ஆனந்தன் உட்பட வேறுபலரும் உரைநிகழ்த்துவர். மாலைநிகழ்ச்சிகள் பண்டிதர் திரு. ஆ. சபாபதி தலைமையில் நடைபெறும். நடனக்கச்சேரி, இசைக்கச்சேரி ஆகிய பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கதம்பவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் திரு. சி. எஸ் எஸ். மணிபாகவதர் தலைமையில் கதம்பவிழா நடைபெற்றது. 'விடிவெள்ளி' அரங்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ்விழாவில்திரு இ. மகாதேவா ஆரம்பஉரை நிகழ்த்தினர். அவர் தமது உரையில் இளம் வாலிப உள்ளங்களிலே ஏற்படும் கலை ஆர்வத்துக்குப் பெற்றோர்கள் ஊக்கம்கொடுக்க வேண்டுமென்றும், இதனால் சமுதாயத்திலே பலவிதமான சீர்திருத்தங்களைச் செய்ய முடியுமென்றும் கூறினர்.

கதம்ப நிகழ்ச்சிகளில் நகைச்சுவைப் பிரசங்கமும், 'ஆச்சிக்குக் கல்யாணம்', 'இதயஒலி' ஆகிய நாடகங்களுடன் வேறு பல நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விழாவில் பலர் உரை நிகழ்த்தினர்.

## அபிஷேகம்

யாழ்ப்பாணம் வெள்ளி

யாழ்ப்பாணம் முனீஸ்வரப் பெருமானுக்கு இன்று மாலை 5 மணி முதல் பஞ்சரசாமிர்த அபிஷேகம் நடைபெறும். திரு பூஞ்சடி வி. க, ஆறுமுகம் 'ஓடுமறைந்தமாயம்' என்னும் பொருள்பற்றி வில்லுப்பாட்டு நிகழ்த்துவார்.

## ஆலயத்தில் மீண்டும் உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த நான்கு வருட காலமாக பூசைகள், திருவிழாக்கள் அற்றிருந்த சங்கரத்தை முருகமூர்த்தி ஆலயத்தில் இனித் தொடர்ந்து வருடா வருடம் பூசைகள் திருவிழாக்கள் ஒழுங்காகச்செய்வதென திரு ஆ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் விசேஷ பஜனை செய்வதென்றும், இம்மாதம் 26-ந் தேதி விசேஷ திருவிழாவும், அன்னதானமும் வழங்குவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டமுடிவில் ஆலய பரிபாலனசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

போஷகர்: திரு. ச, வைரவநாதன். தலைவர். திரு. ஆ. சங்கரப்பிள்ளை, உபதலைவர் திரு: மா. இராசதுரை, காரியதரிசி: திரு. தர்மலிங்கம், உபகாரியதரிசி: திரு. இ. சண்முகநாதன்; தனாதிகாரி: திரு. க. பரமராசா. 17 பேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அபிவிருத்தித் திட்டம் பற்றி காணிமந்திரி

மக்கோனா, வியாழன்

'பகல கமாய பகுதியிலுள்ள பெந்தறையில் அமுல் நடத்தப்பட்டுவரும் நீர்ப்பாசனத் திட்டம் 12,000 ஏக்கர் நிலத்தை நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலமாக்கும் இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகள் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நெல் பெறுவார்கள்' என காணி, நீர்ப்பாசன மந்திரி திரு சி. பி, டி. சில்வா நெடுவா நீர்ப்பாசன திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்து வைத்தும் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசாங்கம் தற்பொழுது பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்க வேண்டியிருப்பதாகவும் இதனால் மிகவும் அத்தியாவசியமான அபிவிருத்தித் திட்டங்களையே அரசாங்கம் அமுல் நடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த



லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றிப் புகழும் ராமாயண காவியத்தின் சித்திரமாம் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

ரெமி பொரட்டேட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும்: அதி உன்னத மூலப் பொருட்களினால் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது: உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

# 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலிருக்கிறது'

## அரசாங்கத்தின் செயல்பற்றி பட்டினசபை கண்டனம்

காங்கேசன்துறை, வியாழன்
"கடந்த ஆண்டு ஏற்பட்ட சூறவளியினால் மயிலிட்டிப்பகுதியில் எத்தனையோ குடும்பங்கள் பாதிக்கப்பட்டனர். நூற்றிற்கதிகமானோர் தொழில் செய்ய வகையின்றி வலைகளையும் வள்ளங்களையும் இழந்தனர். அறுபதுக்கதிகமானோர் கடலோடு அள்ளுப்பட்டு மனைவி மக்களை அநாதைகளாக்கினார்கள், ஈற்றில் மயிலிட்டுப்பகுதி வறுமைக்கும் ஏழ்மைக்கும் பலியானது. இப்படியாக மோசமான நிலைக்குள்ளாகியிருக்கும் இக்கட்டான இந்நேரத்தில் வள்ளங்கள் வாங்குவதற்கு உதவியாகக் கொடுக்கப்பட்ட முற்பணத்தை அரசாங்கம் திரும்பப் பெற நடவடிக்கையெடுத்து வருவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற செயலாகும்.

இவ்வாறு காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கிருபாமூர்த்தி சென்ற திங்களன்று நடைபெற்ற பட்டினசபையின் விசேஷ கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"வள்ளங்களை வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட முற்பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் வள்ளங்களைப் பறிமுதல் செய்வோமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எச்சரிக்கை செய்வது வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கம் இவ்விஷயத்தில் அக்கறை காட்டி முற்பணத்தைப் பெறுவதற்கான காலத்தை ஒரு வருடத்துக்காவது பின்போட வேண்டும் என்று திரு. கிருபாமூர்த்தி கூறினார்.

# மாவட்ட சபைகள் மசோதா விரைவில் வரும்

புத்தளம், வியாழன்
சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டதும் செல்வா-டட்லி பேச்சுவார்த்தைகளில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளதுமான மாவட்ட சபைகள் மசோதா வரவு செலவுத் திட்டத்தை அடுத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாமெனத் தெரிகிறது. இதுசம்பந்தமான நகல் மசோதா ஓரளவு தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் விரைவில் மந்திரிசபைக் கூட்டத்தில் இந்நகல் மசோதா சமர்ப்பிக்கப்படும் எனவும் அறியப்படுகிறது. மந்திரிசபையினால் அங்கீகரிக்கப்பட்டதும் இம்மசோதா பாராளுமன்றத்திற்கு வரும்.

தமிழரசுக்கட்சிக்கும் தேசிய அரசாங்கத் தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட ஒரு வருடத்துக்குள் மாவட்டசபைகள் நிறுவப்பட வேண்டுமென ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாக பாராளுமன்றத்தில் இம்மசோதா நிறைவேற்றப்பட்ட உடனேயே இதை அமுல் நடத்தி மாவட்டசபைகளை நிறுவ வேண்டும் எனவும் கச்சேரி முறையிலிருந்து மாவட்ட சபைகளுக்கு மாறும்பொழுது அதனால் ஏற்படக்கூடிய நிர்வாக மாற்றச் சிக்கல்களையும் பிரச்னைகளையும் சமாளிப்பது பற்றி ஸ்தலஸ்தாபன அமைச்சர் இப்போது ஆராய்ந்து வருவதாகவும் சிக்கல்களைச் சமாளிப்பதற்கான திட்டங்களை உருவாக்குவதில் அமைச்சு கவனம் செலுத்துவதாகவும் அறியப்படுகிறது.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி
இன்று மாலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தானம்- ஸ்ரீமத் சி. எஸ். எஸ். மணிபாகவதர்- மகாபாரதத் தொடர்ச்சிப் பிரசங்கத்தில் "இராசசூய யாகம்" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம்.

நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா.சிவசுப்பிரமணியம்; "இளையான்குடி மாறநாயனார்" என்னும் பொருள் பற்றியும்

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம். திரு த. சுப்பிரமணியம்; "திருநீலகண்டநாயனார்" என்பது பற்றியும், வில்லூன்றி விநாயகராலயத்தில் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீமத் வ. குகசர்மா "விநாயகர் உற்சவம்" என்னும் பொருள் பற்றியும் கதாபிரசங்கம் செய்வர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 2-6-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள், 8-00 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதசுரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30, நேயர்விருப்பம், 10-00 புல்லாங்குழலிசை, 10-15 தேர்ந்த இசை.

## தொழில்மந்திரி நடவடிக்கை

ஏம்பலப்பிட்டி, வியாழன்
அரசியல் கட்சித் தலைவர்கள் தனிப்பட்ட அரசியல் தொழிற்சங்கங்களுக்குத் தலைமை தாங்கும் வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க தொழில் வேலைவாய்ப்பு வீடமைப்பு மந்திரி ஜனாப் எம் ஏச். முகமது நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்கானமசோதா ஒன்றை மந்திரி விரைவில் பார்லிமெண்டில் கொண்டுவரவிருக்கிறார்.

அரசியல் தலைவர்கள் தொழிற்சங்கங்களுக்கு தலைமைதாங்குவதால் மோசமான சூழ்நிலை உருவாகுவதாகவும், இதனால் தொழிலாளர்கள் தவறான வழியில் செலுத்தப்படுகின்றனரெனவும் மந்திரி அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

## கட்சியிலிருந்து பென்குரியன் விலகுவார்

டெல் அவிவ், ஜூலை 1
முன்னாள் இஸ்ரேல் பிரதமர் திரு. டேவிட் பென்குரியன் 35 ஆண்டுகளுக்குமுன் தாம் ஸ்தாபித்த மபாய் தொழிற்கட்சியிலிருந்து விலகத் திட்டமிட்டிருக்கிறார். ஆரம்பத்திலிருந்து கட்சியின் தலைமைப்பதவியை இதுவரை திரு. பென்குரியனே வகித்து வருகிறார்.

## சுகாதார விழா

குரும்பசிட்டி, வியாழன்
வலி வடக்கு காரியாதிகாரி பிரிவின் சுகாதார விழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்றது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. டீ. கிருஷ்ணபிள்ளை தலைமை வகித்து சுகாதார விழாவில் பங்குபற்றி வாய்ப்பாட்டு, நடனம், நாடகம், சுகாதார சம்பாஷணை ஆகிய கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளில் மேற்பிரிவில் வசாவிளான் மேற்கு டிவன்ஸ் தமிழ்வித்தியாசாலையும் கீழ்ப்பிரிவில் குரும்பசிட்டி மகாதேவவித்தியாசாலையும் அதிகமான பரிசுகளைச் சுவீகரித்துக் கொண்டன, தெல்லிப்பழை வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் சுகாதார விழாவுக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

❀ ❀ ❀

### நெடுந்தீவில்

யாழ்ப்பாணம், வெள்ளி
நெடுந்தீவில் சுகாதார வார விழா நெடுந்தீவு காரியாதிகாரி திரு. அந்தோனிமுத்து தலைமையில் நடைபெற்றது. இச்சுகாதார விழாவையொட்டி பல்வேறு போட்டிகளும் இடம்பெற்றன. நெடுந்தீவு கோஷ்டியினருக்கும் நயினாதீவுக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் நயினாதீவுக் கோஷ்டி நெடுந்தீவுக் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. நா. முருகேசு மத்தியஸ்தராகக் கடமை ஏற்றனர். மூன்று மைல் சைக்கிளோட்டப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற வீரருக்கு தனம் ஸ்தாபனத்தார் வெற்றிக்கிண்ணமொன்றைப் பரிசாக வழங்கினர்.

## 'தலைமை ஆசிரியர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்'

குரும்பசிட்டி, வியாழன்
"அரசாங்கம் பாடசாலைகளை சுவீகரித்த பின்னர் எந்த ஒரு சிறிய செலவுகளையும் பாடசாலை வளர்ச்சிகருதி தலைமையாசிரியர்கள் செய்ய முடியாதிருக்கின்றது. இதனால் பெருமளவில் கிராமப்புறப் பாடசாலைகள் பாதிக்கப்படுகின்றன. எனவே அரசாங்கம் கூடிய அளவு அதிகாரங்களை தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும். இதனால் கல்விப் பகுதிக்குரிய கட்டளை சில குறைவதுடன் பாடசாலை வளர்ச்சிகளும் பெரிதும் பயன் கிடைக்கும். இக்கால கல்வி முறையில் பெற்றோர்களின் உதவி ஒத்துழைப்புக்கள் இல்லாவிடில் பாடசாலையின் முன்னேற்றம் காணமுடியாது" என்று மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை பெற்றோர்தின விழாவும் வருடாந்தக்கூட்டமும் பாடசாலை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது பேசுகையில் பண்டிதர் இ. நமசிவாயம் தெரிவித்தார். விழாவுக்குத் தலைமை தாங்கிய வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. சீ. தம்பி பிள்ளை தமது வருடாந்த அறிக்கையினை சமர்ப்பித்துப் பேசினார். மாணவர்களது கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## உபதலைவராக மீண்டும் தெரிவு

சுழிபுரம், வியாழன்
வட்டுக்கோட்டை கிராமசபைக்கூட்டம் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. முதலாம்வட்டார அங்கத்தவர் திரு அ. மார்க்கண்டன் மீண்டும் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார். திரு. மார்க்கண்டன் தன்னை மீண்டும் உபதலைவராகத் தெரிவு செய்ததற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்,


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்க விரும்புகிறீர்களா? இதோ எமது புதிய ஸ்தாபனத்திற்கு விஜயஞ்செய்யுங்கள், அத்துடன் நிக்கல் குரோமியம், எலக்ட்ரோ பிளேற்றிங்கும் செய்துகொடுக்கப்படும். பாலன் எலெக்ட்ரோ பிளேற்றிங் வேர்க்ஸ், 424 A. கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 584

புதிய கண்ணாடி அலுமாரிகள் (8 அடி உயரம் 8 அடி அகலம்) விற்பனைக்கிருக்கின்றன எவர்சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 563

### விற்பனைக்கு

ஒருவரது சொந்தப் பாவிப்பில் உள்ளதும் மிக உன்னத நிலையுடையதுமான ஒரு 'ரேப் றெகோடர்' விற்பனைக்கு உண்டு S.M பரீத், 66, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி.

### தேவை

CN அல்லது EY சீரிஸ் 'சலூன்' கார், குறைந்த விலையில் தேவைப்படுகிறது. என்ஜினும், டயர்களும் நன்றாய் இருந்தால் போதுமானது. மண்ணெண்ணைக்கு மாற்றப்பட்டிருப்பினும் பரவாயில்லை. அறிவிக்கவும்: ராஜா ஸ்டோர்ஸ் மெயின் வீதி, சங்கானை. 590


## குறைந்த செலவில் விடுமுறை ஓய்வு

பேர்லின், ஜூலை 1
ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 1100,000 தொழிற்சங்க உறுப்பினர்கள் தொழிற்சங்கங்களுக்குச் சொந்தமான 523 விடுதிகளில் அநித்து வரும் கோடை கால விடுமுறையைக் கழிப்பார்கள்.

அவர்களில் பலர் துருஞ்சியன் காடுகளுக்கும், பால்டிக் கடற்கரைக்கும் சென்று விடுமுறையைக் கழிப்பர். அநேகர் தொழிற்சங்கங்களுக்குச் சொந்தமான இரு உல்லாசக் கப்பல்களில் கியூபா முதலிய நாடுகளுக்குச் செல்வார்கள், அவர்களுக்குப் போக்குவரத்துக் கட்டணமும், விடுமுறை விடுதிகட்டணமும் மிகக் குறைவு.

## சரித்திர காலத்துக்கு முற்பட்ட கிராமம்

பேர்லின், ஜூலை 1
ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் பேர்லின் நகருக்குத் தென் மேற்கே எஃகு யுகத்தைச் சேர்ந்த (கி. மு. 800-600) ஒரு புராதனக் குடியேற்றப் பகுதியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கிராமத்திலிருந்த வீடுகளின் பகுதிகள் இன்னும் தெளிவாகக் காணக் கூடியதாகவிருக்கின்றன. அடுப்புகள் அப்படியே இருக்கின்றன. மண் பாத்திரங்களின் உடைந்த துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டன.

## வகுப்புவாதம்

பேர்லின், ஜூலை 1
"உலகிலேயே உயர்ந்த இனம் தாங்கள் தான் என்ற எண்ணம் இப்பொழுது ஜெர்மனியரிடம் கிடையாது. பொலீனில் சாதாரண மக்கள் வரை நான் சந்தித்தேன். அவர்களிடம் இனபேத வகுப்புவாத எண்ணம் இம்மியும் கிடையாது. ஆபிரிக்கர்களை அவ எங்களையும் சம உரிமையுடையவர்களாகவே கருதி கௌரவிக்கிறார்கள்" என்று மாலி தேச எழுத்தாளரான சிதிக் டெம்பலே பேர்லினில் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினர்.


### கல்வி

#### சிங்களம்

ஆரம்ப சிங்கள வகுப்பொன்று அண்மையில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. சேர்ந்து கல்வி பயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும், G C E பரீட்சையில் 8 மாதத்தில் சித்தியடையலாம் A P. டானியல் தபாற்கந்தோரடி, கரவெட்டி. 591

### கல்வி

G A Q, G S. Q, B. A. B. Sc, G C E, (A/L-Arts & Science) மாலைநேர விடுதலைக்கால வகுப்புகள மேற்படி பரீட்சைகளுக்கு 1966-ம் ஆண்டு தொடக்கம் தோற்றுபவர்களுக்கான வகுப்புகள் 12-7-65 திங்கட்கிழமை மு. ப. 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். தூயகணிதம் பிரயோக கணிதம் உட்பட எல்லாப் பாடங்களும் அனுபவமும் திறமையுமுள்ள ஆசிரியர்களாற் கற்பிக்கப்படும். சேரவிரும்புவோர் பரீட்சையையும் பாடங்களையும் குறிப்பிட்டுப் பத்து சத முத்திரை ஒட்டி விலாசம் எழுதப்பட்ட உறையுடன் உடனே விண்ணப்பிக்கவும். அ. க. காசிப்பிள்ளை பொதுக் காரியதரிசி, வடபிரதேச ஆசிரிய சங்கம், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். 597

இலண்டன் சேம்பர் ஒவ் கொமர்ஸ், இன்ஸ்ரிரியூற் ஒவ் புக்கீப்பர்ஸ், போஸ்மாஸ்ரர்ஸ் அண்ட் சிக்னலர்ஸ், குருவித்தியாலய பிரவேசம் ஸ்ரேசன் மாஸ்டர்ஸ், மாணவ தாதிகள் பரீட்சைக்குரிய வகுப்புக்களுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, யுனிட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 598

ஜி. சி. இ உயர்தர இரண்டாம் வருடத்தில் வைத்தியம், பொறியியல், கலை ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும், யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 596

ஜி. சி. இ. சாதாரணப் பரீட்சைக்குரிய வகுப்புகளில், ஆங்கில மூலம் விஞ்ஞானம்-4, தமிழ் மூலம் விஞ்ஞானம்-6 கலை-9 ஆகிய இடங்களே காலியாக உள்ளது. உடனே தாமதம் செய்யாமல் பதிவு செய்து கொள்ளுங்கள், யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 595

ஆங்கிலம், தமிழ் தட்டியல், சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், சிங்களம் முதலியன வற்றிற்குரிய வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விடுதி வசதிகள் உண்டு. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், 594

ஜி. சி. இ. சாதாரணம் உயர்தரம் வர்த்தகப் பாடங்கள், சிங்களம் ஆகிய வகுப்புகள் முக்கியமாக மாணவிகளுக்காக விசேஷ மாலை வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. தனியான விடுதி வசதிகள் அளிக்கப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி. கரவெட்டி / 107 பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 592

# கல்வி மந்திரியைப் பேட்டிகாண பட்டதாரிகள் சங்கம் முடிவு

குரும்பசிட்டி, வியா

கல்விமந்திரி திரு. இரியகொல்ல யாழ்ப்பாணம் விஜயம் செய்யும்போது, வேலையற்ற கலைப்பட்டதாரிகளின் ஆசிரியர்பதவி நியமனம் குறித்து பேட்டி காணுவதென யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கலைப்பட்டதாரிகள் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு எஸ். நடராசா பேசும்போது கூறியதாவது: கலைப்பட்டதாரிகளின் ஆசிரியர் பதவி நியமனம் குறித்து கடந்தகால அரசாங்க கல்வி மந்திரியால் கசெட் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் சுமார் ஐந்து மாதகாலமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்விஷயம் குறித்து தமிழ் பேசும் எம். பிக்கள் எவரும் பாராளுமன்றத்தில் பேசவில்லை. அதுமட்டுமன்றி கல்வி இலாகாவுடன் தொடர்பு கொண்டு கலந்திட்டனர். ஆசிரியர் பதவி நியமன விஷயத்தில் தொடர்ந்து மௌனம் சாதித்த எமக்கு ... சம் காட்டாது உடனடியாகத் தீர்வுகாண முயற்சி எடுக்க வேண்டும்.

கல்விமந்திரியை நேரில் சந்தித்து தமது குறைபாடுகளை விளக்கிக் கூறி உடனடியாக ஆசிரியர் நியமனங்கள் கலைப் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்துவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. வேலையற்ற கலைப்பட்டதாரிகள் நியமனம் குறித்து முயற்சி எடுக்குமாறு சகல தமிழ்பேசும் எம். பிக்களுக்கும் வேண்டுகோள் விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை வேலையற்ற கலைப் பட்டதாரிகள் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்- திரு வி. ஸ்ரீஸ்கந்தராசா, உபதலைவர்கள்- திரு சி. அழகரத்தினம், செல்வி சி சண்முகலிங்கம், நிர்வாகசெயலாளர்- திரு சி நடராசா, இணைச்செயலாளர்கள்- திரு ரீ. குணரத்தினம், திரு எஸ். கந்தசாமி, பொருளாளர்- திரு. கே. பத்மநாதன்

---

# "குடிசைக் கைத்தொழில் விருத்தியின் அவசியம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

'நாடு பொருளாதாரத்துறையில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்நேரத்தில் நாட்டைச் சீராக்குவதற்கு கிராம குடிசைக்கைத் தொழில்கள் அத்தியாவசியம்' என்று தீவுப்பகுதி எம் பி திரு வி நவரத்தினம் வேலணை பனம் பொருள் உற்பத்தியாளர் விற்பனைச் சங்க இரண்டாவது ஆண்டு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வேலணை அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில், பண்டைக் காலத்து மக்கள் பனையை ஒரு கற்பக தருவென்று பாதுகாத்து வந்தனரென்றும், இதனுல் வரும்பலன்களை கிராம மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டியது இன்றியமையாததென்றும் கூறினர்.

தீவுப்பகுதி வாலிப முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. வ. சண்முகராசா பேசுகையில் "பல நாடுகள் ஒற்றுமையாக வாழ்வதற்கு உதவுபுரிவது கூட்டுறவுசேவை விசம் அரசியலையும் பொருளாதாரத்தையும் பிணைத்து வைத்து நாமிருக்கும் ஒரு வாழ்க்கை முறையாகும்" என்று கூறினர்.

திருவாளர்கள் க சுப்பிரமணியம், க திருநாவுக்கரசு, பண்டிதர் திரு மா. மாணிக்கம் ஆகியோர் உட்பட வேறு பலரும் உரைநிகழ்த்தினர். சங்கீதபூஷணம் சுப்பிரமணியம் விமலேஸ்வரியின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெற்றது.

திரு. வ, ஐயாத்துரை நன்றியுரை கூறினர்.

---

# 50 முறை உலகவலம் வந்த சாரதி

பெர்லின், ஜூலை 1

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் பிரிட்ஸ் சீலீக் என்னும் லொறி சாரதி இதுவரை இருபது லட்சம் கிலோ மீட்டர் 50 முறை உலகத்தை சுற்றி செல்லும் தூரம் தனது லொறியைச் செலுத்தியுள்ளார். இவ்வளவு தூரம் செல்வதற்கு அவருக்கு 38 வருடங்கள் தேவைப்பட்டன. ஆனல் ஒரு சிறிய மோட்டார் விபத்திலும் கூட அவர் சிக்கவில்லை.

# மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய் இந்துசமய விருத்திச்சங்கம் நாளை சனிக்கிழமை மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசையைக் கொண்டாடவிருக்கிறது. நாளை மாலை வேலக்கை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் விசேஷ ஆராதனை செய்வதென்றும் பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரி வாசிகர் மண்டபத்தில் சுவாமிகளுக்கும் விசேஷ ஆராதனை செய்வதென்றும் பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரி வாசிகர் மண்டபத்தில் சுவாமிகளுக்குப் பூஜையும் பிரார்த்தனையும் செய்வதென்றும் நிகழ்ச்சி நிரலில் குறி ... ட்டு ...

---

## இருபாலையில்

இருபாலை சைவபரிபாலன சங்கம் மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசையை கோப்பாய் தெற்கு கற்பகப்பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை திரு. கா. குமூர்த்தி தலைமையில் கொண்டாடவிருக்கிறர்கள். ஆசிரியர் திரு. வை, தெய்வேந்திரன் "திருவாதவூரடிகள்" என்னும் பொருள்பற்றியும் ஆசிரியர் திரு. ச. சதாசிவம் "திருவாசகம் என்னும் தேன்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றுவார்கள். குருபூசையின்போது பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுழிபுரத்தில்

சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் இன்று மாணிக்கவாசகர்விழா கூட்டுப்பிரார்த்தனை சபையாரால் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட ஏற்பாடாகியுள்ளது. மாலை நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனையை அடுத்து நடைபெறவிருக்கும் விழாவில் திரு. சி. நடராசா, பண்டிதர் ப. இராசகுரு சொற்பொழிவாற்றுவர்.

---

# வழக்கம்பரை அம்மன் கோவில் கொடியேற்றம்

சுழிபுரம், வியாழன்

வழக்கம்பரை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி பத்துதினங்கள் திருவிழா நடைபெற்று திங்கட் கிழமை தேர்த்திருவிழாவுடனும் அடுத்ததினம் தீர்த்த திருவிழாவுடனும் முடிவடையும்.

# இப்படியும் ஒரு தொல்லை!

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் குடிகாரர்களின் தொல்லை அதிகரித்துவருவதாக அறியப்படுகிறது. இதனல் ஆஸ்பத்திரி ஊழியர்கள் தமது வேலைகளைச் சீராகச் செய்யமுடியாதிருப்பதாக அறியப்படுகிறது.

சென்ற வெள்ளிக்கிழமை இதுபோன்ற சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. குடிபோதையிலிருந்த ஒருவர் ஆஸ்பத்திரியிலுள்ள பெண் வார்ட்டுக்குள் நுழைந்து பெண்களைப் பெரிதும் சங்கடத்துக்குள்ளாக்கிக்கொண்டிருந்தார் இவரது அட்டகாசத்தைப் பொறுக்க முடியாது பொலிசாரிடம் ஆஸ்பத்திரி அதிகாரிகள் புகார் செய்தனர். இதனைத்தொடர்ந்து பொலிசார் ஸ்தலத்திற்கு வந்து பார்த்த போது மேற்படி நபர் அங்கு காணப்படவில்லை. இந்த நபரை தற்போது பொலிசார் தேடிவருகிறர்கள்.

குடிபோதையிலிருந்த மேற்படி நபர் ஆஸ்பத்திரியில் நுழைந்த அன்று ஆஸ்பத்திரி அரை நேர வேலை பூராவும் தம்பித்துவிட்டது. இதன் காரணமாக அவசர சிகிச்சைபெறவேண்டியிருந்தவர்கள் பெரிதும் இன்னலுக்குள்ளானர்கள்.

---

# அதிக பாடசாலைகள் கல்விமந்திரி திட்டம்

பம்பலப்பிட்டி, வியா

அதிகரித்துவரும் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி வசதி அளிக்குமுகமாக அதிக பாடசாலைகளை கொழும்பில் ஆரம்பிக்க கல்விமந்திரி திட்டமிட்டுள்ளார்.

புதிய பாடசாலைகளை மற்ற மாகாணங்களிலும் ஆரம்பிக்க வேண்டுமா என்பதுபற்றி அறிவதற்காக கல்விமந்திரி மாகாணங்களிலுள்ள உதவி வித்தியாதிபதிகளிடம் இது பற்றிக் கேட்டுள்ளார்.

சில பகுதிகளில் பாடசாலைகள் தேவைப்படாதிருந்த போதிலும் முந்திய அரசாங்கம் அரசியல் காரணங்களுக்காக குறிப்பிட்ட பகுதிகளில் பாடசாலைகளை ஆரம்பித்துள்ளது என கல்விமந்திரி திரு இரியகொல்ல அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

---

# விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய பிரதமவகுப்பு மாணவமாணவியரின் விளையாட்டுப்போட்டி இன்று மாலை வித்தியாலய கல்லூரி முன்றலில் டாக்டர் கே. வி சண்முகரத்தினம் தலைமையில் ஆரம்பமாகிறது. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ப சண்முகரத்தினம் பரிசில் வழங்குவார்.

---

# மாத உதவித்திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஈழநாடு குருவனி கஷ்டநிவாரணச் சபையார் ஆரம்பித்த மாத உதவித் திட்டத்துக்கு ஜூன் மாதப்பணமாக 25ரூபாவை கரவெட்டியைச் சேர்ந்த அன்பர் அனுப்பி வைத்துள்ளார்.

---

# குமாஸ்தா இடமாற்றம்

சுழிபுரம், வியாழன்

சங்கானை பட்டின சபையில் தலைமைகுமாஸ்தாவாக கடமையாற்றிய டோறன் வி. மு. இராசசிங்கம் ஜூலை மாதம் 1-ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாநகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கந்தோர் சக ஊழியர்களால் பட்டினசபை தலைவர் திரு. க. அம்பலவாணர் தலைமையில் ஒரு விருந்துவைபவமும், பாராட்டுக் கூட்டமும் நடாத்தப் பெற்றது.

# துருப்புகள் வாபஸாகின்றன

புதுடில்லி, ஜூலை 1

இந்திய பாகிஸ்தான் துருப்புகள் கட்ச்-ரன் பகுதியிலுள்ள தங்களது நிலைகளிலிருந்து இன்று காலை முதல் வாபஸ் பெற ஆரம்பித்துவிட்டதாக புதுடில்லி, கராச்சியிலிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

---

# புதிய ஆசிரியர் சங்கம் ஸ்தாபிதம்

சண்டி, வியாழன்

அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மத்திய மாகாணக் கிளை சென்ற ஞாயிற்றுக்கிழமை நாவலப்பிட்டி கதிரேசன் குமாரவித்தியாலயத்தில் சங்கத் தலைவர் திரு கா. க. மதியாபரணம் தலைமையில் கூடியபோது தலைவர் தமது தலைமையுரையில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் பரந்த மனப்பான்மையுடன் அகில இலங்கையிலுமுள்ள தமிழ் ஆசிரியர்களதும் பிள்ளைகளினதும் நலனைப் பாதுகாக்காது வெளிமாகாணத்திலுள்ளவர்களுக்கு கண்துடைப்பு வேலை செய்கிறது. இதனல்தான் நாம் அவர்களை விட்டுப் பிரிந்து இயங்கவேண்டியுள்ளது. இப்பிரிவினைக்கு அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கமேயன்றி எமது கிளைச்சங்கம் காரணமில்லை" என்றர்.

"அகில இலங்கையிலுமுள்ள தமிழ் ஆசிரியர்களது சங்கங்களையும் ஒன்று சேர்ப்பதே எமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்திலிருந்து இதனைச் சாதிக்க முடியாது என்றும் தலைவர் தமது தலைமையுரையில் மேலும் கூறினர்.

அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்திலிருந்து பிரிவதன் அவசியத்தை ஊவாமாகாண ஆசிரியர் சங்க காரியதரிசி வற்புறுத்திப் பேசினர்.

வெளிமாகாணங்களின் தமிழ் குழந்தைகளினதும் தமிழாசிரியர்களினதும் பொதுவாகத் தமிழ்ச் சமூகத்தினதும் நலவுரிமைகளை இதுவரை அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் பாதுகாக்கத் தவறியதால் எமது சங்கம் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திலிருந்து இன்றுதொடக்கம் பிரிந்து இவற்றைப் பாதுகாக்கக் கூடிய பிறிதோர் சங்கத்தை அமைக்கவேண்டும் என்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. புதிய மத்தியமாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தில் முன்னைய நிர்வாகிகளே இருக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

# வாழ்க்கைச் செலவு குறைந்துள்ளது

பம்பலப்பிட்டி, வியாழன்

வாழ்க்கைச்செலவுப் புள்ளி சென்ற மாதம் 0 2 குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

மே மாதம் 112.7 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுப்புள்ளி சென்ற மாதத்தில் 112 5 ஆகக் குறைந்தது.

---

# வைத்தியசாலைக்கு கமிஷனர் விஜயம்

கிளிநொச்சி, வியா

கரைச்சி (கிளிநொச்சி)

கிராமசபையின் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஆயுர்வேத கமிஷனர் திரு. பெர்னண்டோ சமீபத்தில் விஜயம்செய்தார். அவ் வேளை கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு. வி ஆனந்தசங்கரி, டாக்டர் க. பொன்னம்பலம் ஆகியோர் மலர்மாலை சூட்டி கமிஷனரை வரவேற்றனர்.

# பாரதத்துக்கு 5வது எஃகு ஆலை

புதுடில்லி, ஜூலை 1

பாரதத்தில் 5-வது எஃகு ஆலை அமைக்கும் திட்டம் ஒன்றை ரிரிடிஷ், அமெரிக்க கம்பெனிகள் கூட்டாகச் சமர்ப்பித்திருப்பதாயும், இது பரிசீலிக்கப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்பட்டது.

---

# கிழக்கு எல்லையில் துப்பாக்கி பிரயோகம்

புதுடில்லி, ஜூலை 1

திரிபுரா—கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் 48 மணி நேர ஓய்வுக்குப்பின் பெலோனியா நகர்மீது பாகிஸ்தான் துருப்புக்கள் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நேற்று மாலை 5 மணிவரை இது நீடித்தது.

மற்றோரிடத்தில் இந்தியப் பகுதிக்குள் வெகுதூரம் ஊடுருவிவந்து அறுவடை செய்யப்பட்ட நெல்லை எடுத்துச் செல்லமுயன்ற பாகிஸ்தானியர் மீது சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

---

# பாக். ஆக்கிரமிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய-பாகிஸ்தானிடையே மோதல்கள் தோன்றவிருந்தன, ஆனல் புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் இவை தவிர்க்கப்பட்டுவிட்டன. இதற்காக பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸனுக்கு நன்றி செலுத்தவேண்டும். ஒப்பந்தமொன்று ஏற்படுவதற்கு முன்னர் யுத்த நிறுத்தத்தை அமுல் செய்ய முடியாதென்றும் பிரிட்டிஷ் பிரதமருக்கு முன்னரே தெளிவுபடுத்தியிருந்தோம்" என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டிருந்தார்.

தமது வெளிநாட்டு விஜயங்கள் குறித்து திரு. சாஸ்திரி தெரிவிக்கையில், தாம் சென்ற நாடுகளிலெல்லாம் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதென்றும் ஐக்கிய அரபு குடியரசு, கனடா ஆகிய நாடுகள் இந்தியாவுடன் நெருங்கிய நேச உறவுகள் கொண்டிருக்கின்றன என்றும் கூறினர்,

"நான் சென்ற நாடுகளிலெல்லாம் என்னை அந்நுள்ள மக்கள் சிறப்புடன் வரவேற்றனர், குறிப்பாக இந்திய மக்களுக்கு இங்கெல்லாம் உயர்ந்தமதிப்பு அளிக்கப்பட்டிருப்பதை நான் காணக்கூடியதாகவிருந்தது" என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினர்.

காமன்வெல்த் மகாநாடு பற்றி பிரதமர் தெரிவிக்கையில் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு பல்வேறு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்ததன் மூலம் எனக்கு சிறந்த அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ருர்.

தமது செய்தியில் இறுதியாக அவர் நாட்டு மக்களுக்கு விடுத்த கோரிக்கையில், நாட்டின் ஐக்கியத்தை வளர்ப்பதில் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு விளங்கவேண்டுமென்றும் சுயமுயற்சி, தியாகம் மூலம் நாம் எமது நாட்டை பல நெருக்கடிகளிலும் பாதுகாக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

# மரண அறிவித்தல்

## சி. மாணிக்கவாசகர்

இரத்தினத்தின் அருமைக் கணவரும் விவேகரபர், சிவகுமாரகுரியர், தெய்வநாயகி, சத்தியபாலன், கோணேஸ்வரன், அம்பிகாவதி ஆகியோரின் அருமைத்தந்தையும், சிவசோதியின் மாமனுருமாகிய இளைப்பாறிய சங்கப் பகுதி அதிகாரி சின்னையா மாணிக்கவாசகர் காலஞ்சென்றுவிட்டார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று மாலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் ஐயனர் கோவிலடி சிவப்பிரகாசம் வீதியிலுள்ள 6-ம் இலக்கத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.